**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2015 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளினை அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக அனுசரித்தல்– மாநில மற்றும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்– ரூ.18,86,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குவது – ஆணை –வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(டி) எண்.35

நாள்:26–10–2015
மன்மத, ஐப்பசி 9,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.63, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 13–10–2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.2166/இவாததி/2015, நாள் 17.7.2015.

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2014 ஆம் ஆண்டு அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தை டிசம்பர் மாதம் 3ம் நாளில் அனுசரிக்கவும், அது தொடர்பான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடத்தவும் ரூ.12,60,000/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே, இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், 2015 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளினை அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் நாளாக அனுசரித்து, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை, சென்ற ஆண்டைப் போலவே நடத்திடவும், தற்போது அனைத்துப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால், சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட செலவினத்துடன் 10 சதவீதம் அதிகமாக அதாவது ரூ.18,86,000/– நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, பின்வருமாறு ஆணையிடுகிறது:–

(i) 2015 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளினை அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக அனுசரித்து, விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் கோப்பைகள் வழங்கவும் ரூ.18,86,000/– (ரூபாய் பதினெட்டு இலட்சத்து எண்பத்து ஆறாயிரம் மட்டும்) கீழ்க்கண்டவாறு செலவினம் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது:–

| வ.எண். | செலவின விவரம் | செலவினத் தொகை |
|---|---|---|
| 1. | மாநில விருதுகள் தங்கப் பதக்கம். (14 பதக்கங்கள்) | ரூ.6,40,860/– |
| 2. | மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மற்றும் பார்வையிடும் மாற்றுத் திறன் குழந்தைகளுக்கு உணவூட்டு செலவினம் . | ரூ.1,10,000/–/– |
| 3. | பொது நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மாற்றுத் திறன் குழந்தைகளுக்கு உணவூட்டுச் செலவினம் . | ரூ.87,340/– |
| 4. | மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 150 நபர்களுக்கு பரிசுகள் மற்றும் கேடயங்கள் வழங்குவதற்கு தேவைப்படும் செலவினம் முறையே முதல் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசு தலா 50 நபர்களுக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் கேடயங்கள். | ரூ.1,10,000/– |
| 5. | கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெறுவோருக்கு பரிசுப் பொருட்கள் வழங்குவதற்கு தேவைப்படும் செலவினம்= 180 நபர்களுக்கு பரிசுகள் மற்றும் 6 குழுக்களுக்கான கேடயங்கள். | ரூ.46,200/– |
| 6. | விழா மேடை அலங்கரிப்பு | ரூ.90,750/– |
| 7. | விழா பேனர்கள் | ரூ.12,100/– |
| 8. | மின்சார விளக்குகள்<br>(2 நாட்களுக்கு) | ரூ.44,000/– |
| 9. | புகைப்படங்கள் (2 நாட்களுக்கு) | ரூ.18,150/– |
| 10. | இனிப்பு மற்றும் காரப் பொட்டலங்கள் (2 நாட்களுக்கு) | ரூ.66,000/– |
| 11. | பால் ( 2 நாட்களுக்கு) | ரூ.16,500/– |
| 12. | மாநில விருதுகளுக்கான சான்றிதழ்கள்,<br>போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்காக | ரூ.14,300/– |
| 13. | விளையாட்டுப் போட்டிகள் நடத்திட சாமியானா, பந்தல் மேடை மற்றும் சாய்வுதளம் அமைத்தல் | ரூ.24,200/– |
| 14. | மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தி பரிசு பொருட்கள் வாங்கி வழங்கிட அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களுக்கும் ரூ.3,300/– வழங்கிட | ரூ.1,05,600/– |
| 15. | நிகழ்ச்சி நடைபெறும் இடங்களுக்கு மாற்றுத் திறனாளி மாணவர்கள் வந்து செல்ல பேருந்து வசதி ஏற்படுத்துதல் | ரூ.5,00,000/– |
| | மொத்தம் | ரூ.18,86,000/– |

ii) ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள தொகைக்குள் செலவினம் மேற்கொள்ளுமாறும், எக்காரணத்தினைக் கொண்டும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள தொகைக்கும் மிகையாக, கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்படக் கூடாது எனவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

iii) 3.12.2015 அன்று அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் பொது விழாவிற்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்ய ஏதுவாக, தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு–I விதி 99–ன் கீழ் ரூ.18,86,000/– (ரூபாய் பதினெட்டு இலட்சத்து எண்பத்து ஆறாயிரம் மட்டும்) முன்பணமாக பெற்று வழங்கவும், விழா நிறைவுற்றதும் இதற்கான செலவின விவரப் பட்டியல்களுடன் உரிய காலத்திற்குள் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(iv) இவ்விழா தொடர்பான அழைப்பிதழ்கள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறுவோருக்கு பங்கேற்பு, பரிசளிப்புச் சான்றிதழ்கள், உணவு அட்டை போன்றவற்றை அரசு மைய அச்சகம், சென்னை–79ல் இலவசமாக அச்சடித்துக் கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3–இல் இனவாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளும் பொழுது கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும்பட்சத்தில் இனவாரியாக அல்லாமல் மொத்தத் தொகையில் செலவினம் மேற்கொள்ளவும் மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அவ்வாறு செலவினம் மேற்கொள்ளப்படும்பட்சத்தில் அது பற்றிய விவரத்தை அரசுக்குத் தெரியப்படுத்துமாறம் மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

“2235– சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101– மாற்றுத் திறனாளிகள் நலன் 1 திட்டத்தில் சேராதது DA விளையாட்டுகள், கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றில் பங்கேற்பதற்காக மாற்றுத் திறனாளிகளுக்கு மானியம் வழங்குதல் 09 உதவித் தொகை, 03 குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித் தொகை

(த.தொ.கு. 2235–02–101–DA–0933)

6. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.47208/நிதி(சந)/2015, நாள் 20.10.2015 பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையர், சென்னை–2.

பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

நிதி(சந)த் துறை, சென்னை–9.
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(மா. சுப்ரமண்ய பிள்ளை)
அரசு சார்புச் செயலாளர்.